## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **ரமேஷ்** | தொழில்: | |
| த.பெ: | ராஜேந்திரன் | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**09.04.2026 OS.03/2023 பி.வா.சா.1. ரமேஷ்**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>:

1) நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் நான்காவது பத்தியில் 7 அடி பொது சந்து என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வாதியும் 7 அடி அகலமும் 22.6 அடி நீளமும் கொண்ட பொதுச்சந்து என்று தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் ராஜேந்திரன், ராஜகோபால் ஆகியோர்களுக்கு இடையே ஒரு பாகப்பத்திரம் எழுதிக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி பாகப்பத்திரத்தை பி.வா.சா.ஆ.2 ஆக சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 4 1/2 அடி பொது சந்தில் பாதி உட்பட எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தை படித்துப் பார்த்துவிட்டு சாட்சி அதில் என்ன எழுதியுள்ளது என்பது எனக்கு தெளிவாகத் தெரியவில்லை என சாட்சியம் அளிக்கிறார். மேற்படி ஆவணத்தின் தெளிவான நகலை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

3) நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.4 ஆவணமான எனது பெரியப்பா ராஜகோபால் அவரது பிள்ளைகளை கட்டுப்படுத்தி இந்த நம்பர் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் 4 1/2 அடி பொது சந்து பாதி பாதைப்பாத்தியம் எனக் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.4 ன் அடிப்படையில் எனக்கும் 2ம் பிரதிவாதி சிராஜூதினுக்கும் தலா 2 1/4 அடி பாத்தியம் என்றால் சரியல்ல அது பொது பாதையாகும்.

4) தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியோடு பார்வையிட்டு அளந்து சமூகம் நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் 7 அடி பொது சந்து என தாக்கல் செய்த அறிக்கைக்கு எனது தரப்பில் எவ்வித ஆட்சேபனையும்

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.04.09 17:59:46 +0530

தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா பொது சந்தில் 7 அடி பாதையில் இந்த வாதிக்கும் பாதை பாத்திய உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

5) நான் பொது சந்தை ஆக்கிரமித்து 3 அடி நீளத்திலும் 1 1/2 அடி அகலத்திலும் 2 அடி உயரத்திலும் சிமெண்ட் சிலாப் அமைத்துள்ளேன் என்றால் சரிதான் 2ம் பிரதிவாதியின் சம்மதத்துடன் தான் மேற்படி சிமெண்ட் சிலாப்பை அமைத்தேன். இந்த வாதிக்கும் தாவா பொது சந்தில் 3 அடி அகலத்திற்கும் 22.6 அடி நீளத்திற்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் கணவர் பற்றி எனது நிரூபண வாக்குமூலத்தின் 3 வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக என்னால் பொய்யாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது உண்மை தான்.

6) நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமான ஆவணத்தை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் பொது சந்தை ஆக்கிரமித்து கட்டியுள்ள சிமெண்ட் சிலாப்பை அப்புறப்படுத்த வேண்டும் என்றால் அப்புறப்படுத்த தயாராக உள்ளேன். தாவா பொது சந்தில் வாகனத்தை நிறுத்தி வாதிக்கு இடஞ்சல் செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் வாதிக்கு பொது சந்தில் எவ்வித உரிமையும் இல்லை பாதைக்கும் அவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

7) தாவா பொது சந்தில் 3 அடி அகலம் இந்த வாதிக்கு உரிமையுடையது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் ராஜேந்திரன் பாக வீட்டிற்கும் மற்றும் பாப்பம்மாள் கோவிலுக்கும் நடந்து சென்று புலங்கிக்கொள்ள வேண்டிய நடைபாதை என உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பாப்பம்மாள் கோவிலுக்கு செல்லும் பொது பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) பாப்பம்மாள் கோவிலுக்கு செல்லும் பொது பாதையை ஆக்கிரமிக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பாப்பம்மாள் கோவில் எனக்கு குலதெய்வம் இல்லை என்றால் சரிதான் அது எனது பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட கோவில் ஆகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 17:59:59 +0530

District Munsif Cum Judicial Magistrate,

Thiruppuvanam